# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விமாணிக் கற்கை நெறி (பகுதி III) – பருவம் I – 2020

## GEM 4061 - பொதுக் கற்பித்தல் முறையியல்

நேரம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

- முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1.

I. அறிகை விருத்தி தொடர்பாக பியாஜே மற்றும் புரூணர் ஆகியோரின் கருத்துக்கள் இடையேயான வேறுபாடுகளைத் தருக. (புள்ளிகள் 02)

II. பாட அணுகுமுறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 02)

III. மாணவர்கள் ஈடுபாட்டுடன் இணைந்து கற்கும் கற்பித்தல் முறைகள் இரண்டினைப் பெயரிடுக. (புள்ளிகள் 02)

IV. வினாக்கேட்டல் நுட்பம் ஆசிரிய வாண்மைத்துவத்திற்குத் தேவைப்படும் இரண்டு கற்பித்தல் முறைகளைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 02)

V. டேலின் கற்றல் அனுபவக் கூம்பின்படி சித்திரப்பாங்கான கற்றல் அனுபவங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 02)

VI. பின்வரும் பாடங்கள் ஒவ்வொன்றையும் கற்பிப்பதற்கு மிகவும் பொருத்தமான கற்பித்தல் முறை எது என்பதை தனித்தனியே பெயரிடுக.

அ. இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரான அரசியல் செயற்பாடுகள்

ஆ. பாராளுமன்ற அமர்வொன்றின் செயற்பாடுகள்

இ. நாட்டார் பாடல் ஒன்றினைப் பாடுவதற்கான அடிப்படைத் திறன்களை அறிமுகம் செய்தல்

ஈ. விஞ்ஞான ரீதியாக சூழலை அவதானித்தல் (புள்ளிகள் 02)

VII. மாணவர்களது பொறுப்பை உறுத்திபடுத்தும் கற்றல் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 02)

VIII. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் வகுப்பறை மதிப்பீட்டை எளிதில் ஒருங்கிணைக்கக் கூடிய கற்பித்தல் முறைகள் இரண்டினை எழுதுக. (புள்ளிகள் 02)

IX. அறிகையாட்சி, எழுச்சியாட்சி, உளவியக்க ஆட்சி ஆகிய ஒவ்வொன்றோடும் நெருங்கிய தொடர்புடைய பாடங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 02)

X. வாண்மைத்துவம் சார்ந்த ஆசிரியர் ஒருவர் பாடம் ஒன்றை மதிப்பிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் இரண்டுவகையான பின்னூட்டல்களையும் எழுதுக.

(புள்ளிகள் 02)

2. பின்வரும் ஒவ்வொரு கற்றல் கற்பித்தல் முறையையும் திட்டமிடும்போது ஆசிரியரின் வகிபங்கினைச் சுருக்கமாக விளக்குக.

அ. ஆசிரியர் செய்துகாட்டல் முறை

ஆ. கலந்துரையாடலோடு கூடிய விரிவுரை முறை

இ. பாத்திரமேற்று நடித்தல்

ஈ. வழிகாட்டப்பட்ட கண்டறிமுறை (5X4= 20 புள்ளிகள்)

3. பின்வரும் சோடி எண்ணக்கருக்களிடையேயான வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

அ. கற்றல் - கற்பித்தல்

ஆ. செயற்பாட்டு ரீதியான அனுபவம் - சித்திரவடிவ அனுபவம்

இ. போலச் செய்தல் - பாத்திரமேற்று நடித்தல்

ஈ. நேரான மீளவலியுறுத்தல் - எதிரான மீளவலியுறுத்தல் (5X4= 20 புள்ளிகள்)

4. I. ஒப்படை முறைக் கற்றல் மற்றும் செயற்றிட்ட முறைக் கற்றல் ஆகியவற்றிடையேயான வேற்றுமைகளைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 10)

II. செயற்றிட்ட முறைக் கற்றலின் தரத்தை மேம்படுத்துவதற்கு ஆசிரியரால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களை விளக்குக. (புள்ளிகள் 10)

5. I. செயற்றிட்ட முறைக் கற்றலைத் திட்டமிடும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களை விளக்குக. (புள்ளிகள் 10)

II. செயற்றிட்ட முறைக் கற்றலின் நன்மை – தீமைகளைச் சுருக்கமாக விளக்குக.

(புள்ளிகள் 10)

6. I. நுண்முறைக் கற்பித்தலின் அடிப்படை எண்ணக்கருவினை விளக்குக.(புள்ளிகள் 10)

II. நுண்முறைக் கற்பித்தலின் அநுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விளக்குக.

(புள்ளிகள் 10)

*************************************